இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 06 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 30 – வியாழக்கிழமை 15 ஆகஸ்டு 2024 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 06 : Thiruvalluvar Year - 2055 - Aadi 30 - Thursday 15 August 2024 - madurai 10 Pages ₹ 5.00

### 78-வது சுதந்திர தின விழாவையொட்டி - இன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றுகிறார்!

## பல விருதுகள் வழங்கி சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார் முதல்வர்!

**சென்னை, ஆக. 15 -**

**நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று (ஆகஸ்ட் 15) கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விருதுகளை வழங்கி, சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார்.**

குடியரசுத் தினத்தன்று மாநில ஆளுநர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதைப் போன்று சுதந்திரத்தினத்தன்று அந்தந்த மாநிலங்களில் அம்மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்திய நாட்டின் 78-வது சுதந்திர தினம் இன்று (ஆகஸ்ட் 15ஆம்) நாடு முழுவதும் கொண்டாடப் படுகிறது. இதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைநகர் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள கொடி மேடையில் இன்று (15.08.2024) காலை 9 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவில் சிறந்த சமூக சேவகர், சிறந்த தொண்டு உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்படும். சமூக சேவகருக்கு ரூ.50 ஆயிரம் ரொக்கமும், தொண்டு நிறுவனத்துக்கு ரூ. 1 லட்சம் ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

**தகைசால் தமிழர் விருது!**

மேலும் 2021ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு தகைசால் தமிழ் விருதை வழங்கி வருகிறது. அதன்படி இந்த ஆண்டு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் - இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆண்டு வழங்கி சிறப்பிக்கிறார்.

இதைத் தொடர்ந்து ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது, தைரியம் மற்றும் துணிச்சலுக்கான கல்பனா சாவ்லா விருது, சிறப்பாகச் செயல்படும் 3 அரசுத் துறைகளுக்கான முதலமைச்சர் நல்லாட்சி விருது, மருத்துவர்கள், நிறுவனங்கள், சமூகப் பணியாளர்கள், ஊனமுற்றோர், சமூக நலன் மற்றும் சிறப்புமிக்க சேவைக்கான கூட்டுறவு வங்கி விருதுகள், சிறந்த மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரங்களுக்கான விருதுகளையும் இவ்விழாவில் முதல்வர் அவர்கள் வழங்குவதுடன். மேலும், குழந்தைகளுக்கு முதல்வர் அவர்கள் இனிப்புகளை வழங்குகிறார்கள்.

**வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன!**

சுதந்திர தினத்தையொட்டி, செயின்ட் ஜார்ஜ் கோட்டை மற்றும் தலைமைச் செயலக கட்டிடம் ஆகியவை வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோட்டை அரண்களுக்கு முன்பாக மூன்று பிரமாண்ட மேடைகள் கட்டப்பட்டு நிகழ்ச்சியைக் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

**9000 போலீசார் பாதுகாப்பு!**

தமிழகத்தைப் பொறுத்தவரை விழா நடக்கும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி 5 நிலை பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர சென்னையில் 9000 போலீசார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சென்னை விமான நிலையத்தில் 7 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும், சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர தின விழா நடைபெறுவதையொட்டி, நிகழ்ச்சி நடைபெறும் இடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுதந்திர தின விழாவின் இறுதி ஒத்திகை தலைமைச் செயலகம் முன் நடைபெற்றது.

**அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!**

நாடு முழுவதும் 78வது சுதந்திர தின விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, விருதுகளை வழங்க உள்ளார். இந்நிலையில், சுதந்திர தினவிழா நடைபெறும் புனித ஜார்ஜ் கோட்டையில், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சுதந்திர தினவிழா நிகழ்ச்சிகளை பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்.

